Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 31, 2023

செவ்வாய்க்கிழமை ஜனவரி 31, 2023 | ஒளி: 08 கதிர்: 198 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## ‘டிஸ்கோ’ கைது

பாரிய போதைப்பொருள் கடத்தல்காரரான ‘டிஸ்கோ’ என அழைக்கப்படும் தர்மகீர்த்தி உதேனி இனுக பெரேரா என்பவர் போதைப்பொருள் மற்றும் கூரிய ஆயுதங்களை வைத்திருந்த வேளையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் ஞாயிற்றுக்கிழமை (29) கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவெல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், 14 கிராம் ஹெரோயின் மற்றும் நான்கு கூரிய ஆயுதங்களை வைத்திருந்த போது, விசேட

தொடர்ச்சி P2

## “பிரபாகரனிடம் நான் கேட்ட இரண்டு கேள்விகள்”

### அரியநேத்திரன் தெரிவிப்பு: த.தே.கூவை பதிவு செய்யாமை குறித்தும் விளக்கம்

■ வ.சக்தி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனிடம், வாகரையிலே உயிரிழந்த போராளிகளை மாவீரர் பட்டியலில் சேர்க்கவேண்டும் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்யவேண்டும் ஆகிய இரண்டு விடயங்களைக் கேட்டதாக, தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் தெரிவித்தார்.

மாவீரர் பட்டியலில் சேர்க்க சம்மதம் தெரிவித்த அவர், கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிகளுக்கும் தனித்தனியே கொள்கைகளும் கோட்பாடுகளும் இருக்கின்றன. அவர்கள் தனித்தனியே செயற்படலாம்; தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணைந்து செல்லலாம்; அதனை இலங்கை தமிழரசுக் கட்சி முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று பிரபாகரன் தெரிவித்தாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



### சின்னத் தேர்தலை நடத்துவதற்கு

## ஆணைக்குழு உறுப்பினர்களின் கையெழுத்து அவசியமில்லை



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் உரிய வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட வேண்டிய அவசியமில்லை என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா, திங்கட்கிழமை (30) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சோற்றுக்காக போராடும் இனம் நாமல்ல;

### தேர்தல் வெற்றியூடாக உறுதி செய்வோம்



வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழரசுக் கட்சியின் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேட்டுகொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 13 ஐ அமல்படுத்துவது அரசாங்கத்தின் கடப்பாடு

### விரைவில் முழுமையாக அமலாக்க வேண்டும் என்கிறார் இராதா



■ எஸ்.கணேசன்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டமென்பது சர்வதேச உடன்படிக்கையாகும் என்றும் அதனை அமல்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும் என்றும் தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன், 13 விரைவில் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### உயர்தர பரீட்சை காலத்தில் மின்வெட்டு

# மூவருக்கு எதிராக அவமதிப்பு வழக்கு

**மனித உரிமைகள் ஆணைக்குழு தாக்கல் செய்தது**


**இலங்கை மின்சாரசபை வேண்டுமென்றே மின்வெட்டைத் தொடர்ந்தது**

**மின்சாரசபையின் அலட்சியம் மாணவர்களின் கல்வி உரிமையை மீறும் செயல்**

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கை திங்கட்கிழமை (30) தாக்கல் செய்தது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் சரத்துகளின் கீழ், இலங்கை மின்சார சபையின் தலைவர் அவமதிப்பு குற்றத்தில் குற்றவாளி என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

தொடர்ச்சி P2



## தனுஷ்கவை உடனடியாக இடைநிறுத்தவும்

### விளையாட்டுத் துறை அமைச்சருக்கு சட்டமா அதிபர் பரிந்துரை




இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து இடைநிறுத்துமாறு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் பரிந்துரை செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு 15 ஆவது முறையாக ஒத்திவைப்பு

கொழும்பு, தெமட்டக்கொடை பகுதியில் இளைஞரொருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினம் பெப்ரவரி 28ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று



கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, திங்கட்கிழமை (30) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## கொலை மிரட்டல் குறித்து ப.:.ப்ரல் குற்றச்சாட்டு

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தமைக்கு பொறுப்பானவர்களைக் கைது செய்ய பொலிஸார் தவறியுள்ளதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) திங்கட்கிழமை (30) குற்றம் சுமத்தியுள்ளது.

PAFFREL

பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு உடனடி பாதுகாப்பை வழங்கியதற்காக பொலிஸ் மா அதிபரை பாராட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## வங்குரோத்து ஸ்டிக்கர் விரைவில் நீங்கும்



வங்குரோத்து நாடு என்று இலங்கைக்கு குத்தப்பட்டுள்ள ஸ்டிக்கர் விரைவில் நீங்கும் என்றும் அடுத்த சில மாதங்களில் வங்குரோத்து நிலையில் இருந்து நாடு மீண்டுவரும் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தேர்தலைக் கண்காணிக்க

## ப.:.ப்ரல், க.:.பே உள்ளிட்ட அமைப்புகளுக்கு அனுமதி



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கண்காணிப்பதற்காக பஃப்ரல், கஃபே , சி.எம்.ஈ.வி உள்ளிட்ட நான்குக்கும் மேற்பட்ட அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நீர் மின் பெறுவதற்கு நீரை திறக்க இணக்கம்

அடுத்த இரண்டு நாள்களுக்குத் தேவையான நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக, நீர்த்தேக்கங்களில் இருந்து போதியளவு நீரைத் திறந்து விடுவதற்கு மகாவலி அதிகாரசபையின் நீர் முகாமைத்துவ செயலகம் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தாழமுக்கமாக வலுப்பெறுகின்றமை காரணமாக மழை

தொடர்ச்சி P2



### அரசாங்கத்தின் வரிகளுக்கு எதிராக

## துறைமுக வாயிலை மறித்து போராட்டம்

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிகளுக்கு எதிராக, இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் இணைந்துள்ள தொழிற்சங்கங்கள், திங்கட்கிழமை (30) நண்பகல் துறைமுக பிரதான நுழைவாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய வரிக் கொள்கையால் தாம் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்துள்ள போராட்டக்காரர்கள், வரிகளை நீக்காவிட்டால் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## 75ஆவது சுதந்திர தினத்தை புறக்கணிக்க தீர்மானம்

### கறுப்பு தினமாக அனுஷ்டிக்கவும் முஸ்தீபு

75வது தேசிய சுதந்திர தின விழாவை புறக்கணிக்கவும் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண சிவில் அமைப்புகள் இணைந்து தீர்மானித்துள்ளன.

தொடர்ச்சி P2

### இலங்கையில் முதலீடு செய்யுமாறு

## சவூதி முதலீட்டாளர்களுக்கு அமைச்சர் சப்ரி அழைப்பு


இலங்கையில் குறிப்பாக கொழும்பு துறைமுக நகரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடு செய்யுமாறு சவூதி முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அழைப்பு விடுத்தார்.

சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரில், இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, ஜனவரி 22 முதல் 27 வரை சவூதி அரேபியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட போதே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சர் சப்ரி, சவூதி அரேபியப் பிரதமருடன் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாக விரிவான இருதரப்பு கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அவர் இராச்சியத்தில் தங்கியிருந்த காலத்தில் அவருக்கும் அவரது தூதுக்குழுவினருக்கும் அளிக்கப்பட்ட தாராளமான

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# "பிரபாகரனிடம் நான் கேட்ட இரண்டு கேள்விகள்"

2010 இல் இருந்துதான் தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என முதலாவதாக முன்வைத்தவர்கள் ஈ.பி.எல்.ஆர்.எவ் ஐச் சேர்ந்த சுரேஸ் பிரேமசந்திரனும், சிவசக்தி ஆனந்தனும்; அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் டெலோவும் இதனைப் பதிவு செய்யவேண்டும் என தெரிவித்திருந்தது என்று அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் 2004 ஆம் ஆண்டு தான் உட்பட 22 எம்.பிகள் தெரிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்ட அரியநேத்திரன், தாம் பாராளுமன்றத்துக்கு செல்லாமல், கிளிநொச்சியிலே இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

அங்கு வைத்தே புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனிடம் மேற்குறிப்பிட்ட விடயங்களை கேட்டதாகவும் இதற்காகத்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பை நாம் பதிவு செய்யவில்லை எனவும் இதுதான் வரலாறு இதனை மாற்ற முடியாது. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மட்டக்களப்பு பெரியகல்லாறு ப்ரித்தி மண்டபத்தில ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற போது அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக்கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டும் என தெரிவிப்பவர்கள் எல்லாம் 2010 ஆண்டுக்கு முன்னர் எவரும் கூறியிருக்க வில்லை. 2018 ஆம் ஆண்டு முதல் தடவையாக தேர்தல் இடம்பெற்றபோது அதனை எவ்வாறு எதிர்கொள்வது என மட்டக்களப்பில்தான் நாங்கள் கூடி முடிவெடுத்திருந்தோம்.

அதில் அனைவரும் வட்டாரங்களுக்குச் சென்று பொதுவேபட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அதில் எந்த கட்சியினதும் பெயர்கள் பாவிப்பது இல்லை என முடிவெடுத்திருந்தோம்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எமது தீர்மானம் மாற்றப்பட்டது. அதன் பிற்பாடுத்தான் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளுக்கு பிரதேச சபைகள் பிரிக்கப்பட்டன.

அதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக எமது முன்னாள் எம்.பி பொன்செல்வராசா தான் தேர்தல் பிரசாரத்திற்கு வரமுடியாது என அதிலிருந்து விலகியிருந்தார். இதுதான் வரலாறாகும்.

1949ஆம் ஆண்டு தந்தை செல்வா, இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்ததற்குப் பிற்பாடு 1956ஆம் ஆண்டு மட்டக்களப்பிலே இருந்து முன்னாள் எம்.பிகளான இராஜதுரை, சீ.மூ.இராசமாணிக்கம் அவர்களையும் இனம்கண்டிருந்தார் என்றார்.

# 'டிஸ்கோ' கைது

அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தற்போது பிரான்ஸில் வசிக்கும் பிரபல பாதாள உலக மன்னன் 'ரூபென்' என்பவரின் நெருங்கிய கூட்டாளி என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்படி, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் உட்பட 'ரூபெனால்' நடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு உதவியவர் என நம்பப்படுகிறது.

## துறைமுக வாயிலை...

நேற்றைய தொழிற்சங்க நடவடிக்கைக்கு அரசாங்கத்தின் பதிலின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கை குறித்து பரிசீலிப்பதாக வர்த்தகம், கைத்தொழில் மற்றும் சேவைகள் தொடர்பான முற்போக்கு தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஷியாமல் சுமனரத்ன தெரிவித்தார்.

அரச சொத்துகளை சர்வதேச சக்திகளுக்கு விற்க அரசாங்கம் முயல்லதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, அரசாங்கம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள வரிகளை எதிர்க்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பல தொழிற்சங்கங்களின் பங்குபற்றுதலுடன் விசேட கலந்துரையாடலொன்று திங்கட்கிழமை (30) இடம்பெற்றது.

## சவூதி முதலீட்டாளர்களுக்கு...

விருந்தோம்பல் மற்றும் அவரது வருகை தொடர்பாக செய்யப்பட்ட சிறந்த ஏற்பாடுகளுக்காக அமைச்சர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான சிறந்த இருதரப்பு உறவுகளை அமைச்சர் சப்ரி சுட்டிக் காட்டியதுடன், சர்வதேச அரங்குகளில், குறிப்பாக 2009, 2012, 2014 ஆகிய ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் வகித்த போது இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்காக சவூதி அரேபியாவுக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திகளில் சவூதி அபிவிருத்தி நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏறக்குறைய 1.5 பில்லியன் சவூதி ரியால் பெறுமதியான பங்களிப்பையும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒற்றுமையையும் அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

## ஆணைக்குழு...

இது தொடர்பான வர்த்தமானி திங்கட்கிழமை (30) அல்லது செவ்வாய்க்கிழமை (31) அச்சிடுவதற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் இருந்து தேவையான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவதற்கு இதுவரை அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பப்படவில்லை என்று அரசாங்க தகவல் திணைக்களம் ஞாயிற்றுக்கிழமை (29) தெரிவித்திருந்தது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரச செய்தி பணிப்பாளர் நாயகம் சிந்தன கருணாரத்னவின் கையொப்பத்தில் இந்த விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த நிலையிலேயே தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்துள்ளார்.

## சோற்றுக்காக போராடும் இனம் நாமல்ல

இலங்கை தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழரசுக் கட்சியின் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் தவறானவர்களைத் தெரிவுசெய்து மக்கள் தாம் செய்த தவறை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது சந்தர்ப்பமாக இந்தத் தேர்தல் இருக்கின்றது.

ஜனநாயக ரீதியில் சர்வதேசத்துக்கும் இந்தப் பெரும்பான்மை அரசாங்கத்துக்கும் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு இந்தத் தேர்தல் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக எமக்கு அமைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையில் ஈடுபடுமாக இருந்தால், அது மக்களது ஜனநாயக சுதந்திரத்தில் கைவைக்கும் செயற்பாடாகும். அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் அதற்கும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் பின்னிற்க மாட்டோம் என்றார்.

எமது கட்சியில் எந்தவொரு ஊழல் மோசடி, கொலைக் குற்றச்சாட்டு மற்றும் மண் மாபியாவில் ஈடுபட்டவர்கள் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் கூறினார்.

# மூவருக்கு எதிராக அவமதிப்பு வழக்கு

மேற்குறிப்பிடப்பட்ட மூவரும் உயர்தர பரீட்சைக் காலத்தில் தொடர் மின் விநியோகம் வழங்கும் வகையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்பித்த உடன்படிக்கைக்கு இணங்கத் தவறியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு மேற்படி தரப்பினர் சமரசம் செய்து கொண்ட போதிலும், இலங்கை மின்சார சபை வேண்டுமென்றே மற்றும் தீங்கிழைக்கும் வகையில் தீர்வைப் புறக்கணித்து மின்வெட்டைத் தொடர்ந்ததாக ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

பரீட்சை காலத்தில் தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கு மின்சாரசபையின் அப்பட்டமான அலட்சியம் மாணவர்களின் கல்வி உரிமையை மீறும் செயலாகும் என்று ஆணைக்குழு கருதுகிறது.

மின்சாரத்தை வழங்குவதற்கு அர்த்தமுள்ள வழிகள் இருப்பதாக ஆணைக்குழுவின் முன் ஒப்புக்கொண்டு அதன் அடிப்படையில் தீர்வு காணப்பட்ட போதிலும் மின்சாரசபை உத்தரவாதத்தை புறக்கணித்து மின்வெட்டுகளை முன்னெடுத்ததாக ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

## ஹிருணிகாவுக்கு எதிரான...

நேற்று (30) வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, சாட்சியங்களை முன்னெடுப்பதற்கு மேலதிக திகதியை கோரியதை அடுத்து பெப்ரவரி 28ஆம் திகதிக்கு சாட்சிய விசாரணைக்கான தினம் அறிவிக்கப்படும் என்று உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, நவம்பர் 16ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் அதிகுற்றப்பத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள வீடியோ ஆதாரங்களின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்ய கால அவகாசம் தேவை என்றும் வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் பிரதிவாதி ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் ஆஜரான சட்டத்தரணி அஷான் பெர்னாண்டோ மன்றில் கோரி நின்றார்.

இந்த வழக்கின் சாட்சிய விசாரணை 6 வருடங்களாக பிற்போடப்பட்டு வருவதாக முறைப்பாட்டாளர் சார்பில்

## கொலை மிரட்டல் குறித்து பஃப்ரல் குற்றச்சாட்டு

எவ்வாறாயினும், அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு 12 நாள்கள் கடந்துவிட்ட போதிலும், பொலிஸார் இதற்கு காரணமானவர்களைக் கைது செய்யத் தவறியுள்ளதாக குற்றம் சாட்டினார்.

அச்சுறுத்தல் விடுத்தவர் வெளிநாட்டில் வசித்தாலும் அத்தகைய குழுக்களுக்கு உள்நாட்டில் ஆதரவு உள்ளது என்பது தெளிவாகிறது என்று அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில உறுப்பினர்களில் தனிப்பட்ட இல்லங்கள் புகைப்படம் எடுக்கப்பட்டு அவர்களுக்கு வாட்ஸ்அப் மூலம் மிரட்டல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளதாகவும் மிரட்டல் விடுக்கப்பட்ட தொலைபேசி இணைப்புகளின் கொடுப்பனவுகளைப் பார்த்து உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் திறமையான புலனாய்வு அதிகாரிகள் மற்றும் குற்றவாளிகளை அடையாளம் காணும் தொழில்நுட்பம் இருப்பதாகவும், நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்தும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுவது, பொலிஸார் மீதும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதில் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் கெடுக்கும் என்றும் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பஃப்ரல், கஃபே உள்ளிட்ட...

எவ்வாறாயினும், 02 கண்காணிப்புக் குழுக்களுக்கு மாத்திரமே வாக்களிப்பு நிலையங்களுக்குள் கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்படுவதாகவும் ஏனைய அமைப்புகள் வெளிப்புற கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கண்காணிப்பதற்காக 7,000 சுயாதீன கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தற்போது மாவட்ட மட்டத்தில் கடமையாற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அடுத்த வாரம் முதல் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## 13 ஐ அமல்படுத்துவது அரசாங்கத்தின் கடப்பாடு

ஹட்டனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் திங்கட்கிழமை (30) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டமென்பது நாட்டின் அரசமைப்பில் இருந்தாலும், அது இன்னும் முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் போலியான விம்பம் உருவாக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

"அதேபோல 13 ஐ முழுமையாக அமல்படுத்துவதால் வடக்கு, கிழக்குக்கு மட்டும் அல்லாது, 9 மாகாணங்களும் அதன்மூலம் பயன்கிட்டும். எனவே, தமிழர்களுக்கு எதிரான சில சக்திகளே 13 தொடர்பில் போலி பிரசாரத்தை முன்னெடுத்துவருகின்றன. இவற்றை அரசு கருத்திற்கொள்ளாது, சர்வதேச உடன்படிக்கையான 13 ஐ அமல்படுத்த வேண்டும்" என்றார்.

"இலண்டன், மலேசியா போன்ற நாடுகளில் உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள்கூட, எமது நாட்டில் உள்ள மாகாணசபைகளுக்கு இல்லை. உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறுமா என்பது குறித்து எதிர்வரும் 10 ஆம் திகதியே உறுதியான முடிவுக்கு வரமுடியும்" என்றார்.

## 75ஆவது சுதந்திர...

1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடம் இருந்து நாடு சுதந்திரம் பெற்ற போதிலும் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்காததால் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவை புறக்கணிக்கவுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் தற்போது நாட்டில் வாழும் எவருக்கும் சுதந்திரம் இல்லை என்றும் பெப்ரவரி 4ஆம் திகதியை கறுப்பு தினமாக அனுஷ்டித்து, உரிய சுதந்திரத்தைப் பெறுவதற்கான பிரசாரத்தை முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரத்துக்காக போராடிய தேசிய வீரர்களில் தமிழர்களும் உள்ளனர் என்றும் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் சுதந்திரத்துக்காக போராடியதாலேயே எமக்கு சுதந்திரம் கிடைத்தது என்றார்.

## நீர் மின் பெறுவதற்கு நீரை திறக்க இணக்கம்

பெய்யும் சாத்தியக்கூறுகளை கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் கொத்மலை, ரன்தெனிகல நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் திறக்கப்படும் என்றும் நீர் முகாமைத்துவ செயலகம் தெரிவித்தது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பமான க.பொ.த உயர்தரப்பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையில், 17ஆம் திகதி வரை மின்வெட்டை அமல்படுத்த வேண்டாம் என மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு என்பன தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 25ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது மின்வெட்டை அமல்படுத்துவதில்லை என்று உடன்பாடு எட்டப்பட்ட போதும் தாம் உடன்படவில்லை என்று தெரிவிக்கும் இலங்கை மின்சாரசபை தொடர்ந்தும் மின்வெட்டை அமல்படுத்தி வருகிறது.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சருக்கும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இடையே இந்த விடயம் குறித்து முரண்பாடுகள் நிலவி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## தனுஷ்கவை உடனடியாக இடைநிறுத்தவும்

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இருபதுக்கு 20 உலகக் கோப்பையில் விளையாடுவதற்காக சென்ற தனுஷ்க, பெண்ணொருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றுவதற்காக அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணி குறித்து முன்வைக்கப்பட்ட பல குற்றச்சாட்டுகளை ஆராயும் அறிக்கை சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்துக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஐந்து பேர் கொண்ட குழு சமர்ப்பித்த அறிக்கையின் பரிந்துரைகளுக்கு சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், அவுஸ்திரேலியாவில் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு வரும் வரை உடனடியாக தனுஷ்கவை இடைநிறுத்துமாறு பரிந்துரைத்துள்ளார்.

## வங்குரோத்து ஸ்டிக்கர் விரைவில் நீங்கும்

கரந்தெனிய மற்றும் பலபிட்டிய தொகுதிகளில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாக சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சில பிரச்சினைகள் இன்னும் எஞ்சியுள்ளதாகவும் அவை அனைத்தும் விரைவில் தீர்க்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்ட அமைச்சர், கடனை மீளச் செலுத்துவதன் மூலம் முதலீடுகளை கொண்டுவர முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

முதலீடுகள் மூலம் சம்பளம் அதிகரிப்பதுடன், வரிகள் மற்றும் வங்கிகளின் வட்டிவீதங்களும் குறையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடு மற்றும் மக்களின் முன்னேற்றத்துக்காக எப்போதும் உழைத்த கட்சி ஐக்கிய தேசிய கட்சி என்றும் ஒவ்வொரு முறையும் ஐக்கிய தேசிய கட்சி நாட்டை ஆட்சி செய்த போதும் நாடு முன்னேறியது என்றும் சுட்டிக்காட்டினார்.

# ரணிலுடன் கைகோர்த்து பயணிப்போம்

வங்குரோத்தடைந்த இலங்கையை கட்டியெழுப்ப, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும் எனத் தெரிவிக்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, எந்தத் தடைகள் வந்தாலும் ரணிலுடன் கைகோர்த்துப் பயணிப்போம் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாடு முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கும் நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்குமான பயணத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே தலைமையேற்க முடியும்.

தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும். அதில் எமக்குப் பிரச்சினைகள் இல்லை. ஆனால், நாட்டு மக்கள் உண்ண உணவின்றி இருக்கும்போது, நாட்டுக்கு தேவையான எரிபொருளைக் கொண்டுவருவதற்கு முடியாமல் இருக்கும்போது, புற்றுநோய் வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் நாடு இருக்கிறது. இதுபற்றியெல்லாம் எமக்கு தேவையில்லை; எனது நபரை பிரதேசசபைக்கு அனுப்புங்கள் என்றே சிலர் கூறுகிறார்கள்.

அதிகார பேராசையே இதற்குக் காரணம். நாட்டுக்காக இந்த அதிகார பேராசை ஏற்படவில்லை. தனது அரசியல் நோக்கங்களுக்காகவே இப்போது தேர்தலை கேட்கிறார்கள். வங்குரோத்தடைந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திர மே மீட்க முடியும். அதனைத் தடுப்பதற்கே பலர் முயலுகிறார்கள்.

எந்தவொரு தடைகள் வந்தாலும் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கும் செயற்பாடுகளை ரணிலோ அல்லது ரணிலுக்கு உதவுவதை நாமோ நிறுத்தப்போவதில்லை. 2048ஆம் ஆண்டு இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் பயணத்தை தொடர்ந்து முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தார்.









## வசந்த முதலிகேவை விடுதலை செய்...




பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வசந்த முதலிகேவை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி 12,000 சத்தியக்கடதாசிகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் நேற்று (30) கையளிக்கப்பட்டன.

## ரணிலின் நாடகத்தைக் கண்டு தமிழர்கள் ஏமாறப்போவதில்லை




யானை, மொட்டை விரட்டியடிக்க நாட்டு மக்கள் ஒன்றிணைந்துள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய பிரஜை முன்னணியின் ஏற்பாட்டாளர் சமீர பெரேரா, 13ஆவது திருத்தம் தொடர்பான ஜனாதிபதியின் நாடகங்களைப் பார்த்து தமிழ் மக்கள் ஏமாற மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

ஹட்டனில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையால் ஜனாதிபதியாகவில்லை. 134 எம்.பிக்களே அவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

நான் ஒரு சிங்கள பௌத்தனாக இருந்தாலும் நாட்டைப் பிளவுபடுத்த விரும்பவில்லை. ஆனால், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவேன் எனவும் ரணில் கூறியிருக்கிறார். ரணிலின் இந்த நாடகங்களுக்கு மக்கள் ஏமாறப்போவதில்லை. ரணிலின் இதுபோன்ற நாடகங்களை மொட்டும், யானையுமே ஏற்றுக்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்காகவும் ரணில் இந்த நாடகத்தை ஆடுகிறார். முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை காலந்தாழ்த்த சதிகளை செய்து கொண்டு, இப்போது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் அச்சுறுத்தி வருகிறார்.

ரணிலின் இந்த நாடகங்களைப் பார்த்து, தமிழ் மக்கள் ஏமாறப்போவதில்லை. தமிழ் மக்களினது கட்சிகளில் உள்ள வயதானவர்களே, ரணிலின் இந்த நாடகங்களை நம்புவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேவை

சுற்றுலா சபையின் அனுமதியுடன் இயங்கும் ஹோட்டல், உணவகத்துக்கு, முகாமையாளர், வரவேற்பாளர், சமையலாளர், சமையலறை உதவியாளர்கள்,பார்மேன் தேவை அழையுங்கள் 0777879135, 076-6432557

## ரணில் ராஜபக்ஷவையே கொண்டுவர ஜே.வி.பி முயற்சி



ரணில் ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கான திருட்டு நாடகங்களை ஜே.வி. பியினர் செய்து வருவதாகக் கூறும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, மொட்டுக்கும், ஜே.வி.பிக்கும் வாக்களிப்பது ஒன்றாகும் என்றார்.

இப்போது தேர்தல் பற்றி பேசும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தேர்தல் தொடர்பிலான பயத்திலேயே இருந்தார். கடந்த காலங்களில் நாம் தேர்தல் தொடர்பில் பேசும்போது எங்களைப் பைத்தியக்காரர்கள் என விமர்சித்தார் எனவும் தெரிவித்தார்.

இப்போது தேர்தல் வேண்டுமென கூச்சலிடும் அநுரகுமாரவின் வாக்கு வங்கி வெறும் 3 சதவீதம் மட்டுமே உள்ளது. ரணில்- ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கே அநுர முயல்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

தேசத்தைப் பாதுகாக்க, இனத்தைப் பாதுகாக்க வேண்டுமென கூறும் ராஜபக்ஷர்களின் பொய்களை நம்பி மீண்டும் ஏமாறப் போகிறீர்களா? அல்லது அவர்களுக்கு இணையாக இந்நாட்டில் பஸ்களை எரித்த, மக்களை கொன்றொழித்த, மாநாயக்க தேரர்களை கொன்றொழித்த, கட்சிசார்பற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு பஸ்களை எரித்தவர்களின் பொய்களை நம்பி ஏமாறப்போகிறீர்களா எனவும் கேள்வி எழுப்பினார்.

மொட்டுக்கும், ஜே.வி.பிக்கும் வாக்களிப்பது ஒன்று. ரணில் ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கான திருட்டு நாடகங்களை ஜே.வி.பி செய்து வருகிறது எனவும் தெரிவித்தார்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

## சூத்திரதாரியை மறைத்து வைத்துள்ளனர்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைத்து வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி, தாக்குதலின் பின்னணியில் இருந்த அனைவரையும் தண்டிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை யாரோ ஒருவர் மறைத்து வைத்திருக்கிறார். மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து சூத்திரதாரியை வெளியில் கொண்டுவந்து, இத்தாக்குதலின் பின்னணியில் இருந்த அனைவரையும் தண்டிக்க வேண்டும் என்றார்.

ஜனநாயக நாட்டில் மத வழிபாட்டு த்தலங்களுக்குச் சென்ற அப்பாவி பொதுமக்களை கொன்றொ ழித்தார்கள். இந்தக் கொலைகா ரர்களை பல வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் தண்டிக்க முடியாமல் இருக்கிறது. எனவே, கொலைக்காரர்களை இதுவரையில் தண்டிக்காத இந்த அரசாங்கம் இனியும் ஆட்சியில் இருப்பதற்கு தகுதியில்லை.



நாட்டு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே நாம் கூறி வருகிறோம். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இவர்களுக்கு தண்டனைக் கிடைக்கும். ஆனால், அதற்கு முன்னராக தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கமும் அதனை செய்ய வேண்டும் என்றே அழுத்தங்களை வழங்குகிறோம் எனவும் தெரிவித்தார்.

## வேலைத்திட்டங்களை விரைவாக நிறைவு செய்க

கொழும்பு நகரத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக நிறைவு செய்ய வேண்டுமென, நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பு நகரத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்காக இந்த வருடம் மாத்திரம் 457 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 99 சதவீதமான வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 55 துணை வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபை, காணி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை என்பன ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டங்களை செய்து வருகின்றன.

கொழும்பு நகரத்தை உலக தரத்துக்கு உயர்த்துவது, சுற்றலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் என நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



**“ கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 55 துணை வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கொழும்பு நகரத்தை உலக தரத்துக்கு உயர்த்துவது, சுற்றலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் என நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது**

## தமிழ், சிங்களவர்களை குழப்பப் பார்க்கிறார்கள்

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்ப்படுத்தப்போவதாகக் கூறி, நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயல்வதாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரகொடி, தமிழ், சிங்கள மக்களை மீண்டும் குழப்பப் பார்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

இப்போது நாட்டில் இருக்கும் பிரதான பிரச்சினை எது? ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்துவதற்குப் பதிலாக நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என அரசாங்கமே கூறுகிறது.

இவ்வாறான நிலையில் விரைவாக தீர்க்க முடியாதவற்றைக்கூறி, மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகளை அரசாங்கம் தோற்றுவித்துள்ளது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் 1988ஆம், 1989ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டது. இதுவரையில் 6,7 ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள்கூட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்ப்படுத்த முயலவில்லை.

ஏன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட 6 தடவைகள் பிரதமாக இருந்திருக்கிறார். அப்போதுகூட ரணிலும் இதனை முயலவில்லை. ஆனால், இப்போது அதனை செய்ய முயல்கிறார். இதனூடாக தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை அரசாங்கம் தூண்டப் பார்க்கிறார்.



13ஆவது திருத்த விடயத்தில் ரணிலை எதிர்ப்பது யார்? அவரின் அரசாங்கத்துக்குள் உள்ளவர்களே ரணிலை எதிர்க்கிறார்கள். இந்த விடயத்தில் சர்வக்கட்சி மாநாட்டை அரசாங்கம் நடத்துவதற்கு முன்னர், அரசாங்கம் அனைவருடனும் கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டுக்குவந்து அதனை அறிவித்திருக்கலாம் என்றார்.

## ரணிலுக்கு வாக்கு சேகரிப்பதே பாவங்களை போக்க ஜே.வி.பிக்கு உள்ள ஒரே வழி

ஜே.வி.பி செய்த பாவங்களைப் போக்கிக்கொள்ள, ஜனாதிபதி ரணிலுக்காக வாக்கு சேகரிக்க வேண்டும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ரணில் என்றால் ஜே.வி.பிக்குப் பயம் எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, தன்னால் முடியாதென ஆட்சியை ஒப்படைக்க எதிர்க்கட்சி தலைவருக்கு அழைப்பு விடுத்தபோது, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஓடி ஒழிந்துகொண்டார்.

ஆளும், எதிர்க்கட்சி அனைவரும் மக்களிடம் நன்றாக வாங்கிக்கட்டிக்கொண்டார்கள். எவருக்கும் வெளியில் வந்து வீதியில் நடந்து செல்ல முடியாத நிலையே ஏற்பட்டிருந்தது. இந்நிலைமையை நான் சரி செய்கிறேன் எனக் கூறியே ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார்.

நான் பயணித்த பாதையிலேயே செல்லுங்கள், பாதையை மாற்ற வேண்டாம் என்றே கூறிவந்தார். அப்போது ஓடியொழிந்தவர்கள் இப்போது கிராமங்களுக்கு சென்று தங்களால் முடியும் என்கிறார்கள். அவர்களால் ஒன்றுமே முடியாது. இப்போது அவர்கள் திருடர்கள் பற்றி பேசுகிறார்கள். உண்மையில் திருடர்கள் இருந்தால் பொலிஸ் நிலையத்தில முறைப்பாட்டைப் பதிவு செய்யுங்கள். 2019ஆம் ஆண்டில், ரணில் திறைச்சேரியில் 3 மில்லியன் டொலரை சேமித்திருந்தார். இவ்வாறான நிலையில் மக்கள் ரணிலையும், ஐ.தே.கவை கடந்த தேர்தலில் விரட்டியடித்தார்கள். மீண்டும் ஐ.தே.கவுக்கு வாக்களிக்க வேண்டாமென ஜே.வி.பியினர் பிரசாரம் செய்து வருகிறார்கள்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களியுங்கள் என வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தால், ஜே.வி.பி செய்த பாவங்களை போகும் எனவும் கேலி செய்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்களை கடந்த 3 வருடங்களாக ஜனாதிபதியாக விடாமல் தடுத்தார்கள். ரணில் ஆபத்தானவர் என்பதாலும் ரணில் மேல் உள்ள பயத்தாலும் ஜே.வி.பியினர் இவ்வாறு நடந்துகொள்வதாகவும் தெரிவித்தார்.

**எஸ் டீ கே குயிக்ஷோஸ் (பீவீடி) எல்டீடி**
**7/4, இசிப்பதான மாவத்தை,**
**கொழும்பு 05.**

**கம்பனி பதிவிலக்கம் PV112897**

**கூறப்பட்ட மூலதனத்தினை குறைப்பதற்கான முன்மொழிதல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 59(2) ஆம் பதிவிற்கமைய வழங்கப்படும் பொது அறிப்பு**

எஸ் டீ கே குயிக்ஷோஸ் (பீவீடி) எல்டீடி இன் கூறப்பட்ட மூலதனம் ரூபாய் எண்பது மில்லியனை ( Rs.80,000,000/-) பிரதிநிதித்துவப்படுத்தும் **எட்டு மில்லியன்** (8,000,000) சாதாரணப் பங்குகளை **ரூபா ஐந்து மில்லியனாக** (Rs.5,000,000/-) சாதாரணப் பங்குகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் இன்றி குறைப்பதற்கு பணிப்பாளர் சபையினால் முன்மொழியப்பட்டமைக்காக இப்பொது அறித்தலானது வழங்கப்பட்டுள்ளது. இம்மாற்றமானது இப்பொது அறிவித்தலை வழங்கிய 60 நாட்களின் பின்னர் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட கம்பனியின் சார்பாக
எம் என் எஸ் (அசைன்மென்ட்ஸ்) (பிரைவெட்) லிமிடட்
செயலாளர்கள்

26.01.2023

அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய

# நீதி பொறிமுறைகளை நீதி அமைச்சர் அறியாதவரா?

## செல்வம் எம்.பி கேள்வி

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர், அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதிப் பொறிமுறைகளை அறியாதவராக இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

வெளிநாட்டிலிருந்து வந்த பிரதிநிதி ஒருவருக்கு, நீதி அமைச்சர் விஜயதாஸ நன்றாகக் கதை அளந்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாக, சில தமிழ் அரசியல்வாதிகள் இருப்பதாகவும், அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமையால், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருப்பதாகவும் கூறியிருப்பது விஷமத்தனமானதும் சிறு பிள்ளைத்தனமானதும் ஆகும்.



ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் பேரில், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை பட்டியலிட்டு, ஆதாரத்தோடு ஜனாதிபதியிடம் கடந்த ஆவணி மாத சந்திப்பில் நாங்கள் கையளித்திருந்தோம். அதன் பிரகாரம், 13 அரசியல் கைதிகள் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது. அதன் அடிப்படையில் மற்ற அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை, அரசியலமைப்பு தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. வழக்கு நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம், வழக்கை மீளப் பெற்ற பின்னர் விடுதலை செய்யப்பட முடியும் என்பதையும் சட்டம் சொல்கின்றது.

நீதி அமைச்சராக தன்னுடைய கடமையை சரியான முறையில் அவர் செயற்படுத்த வேண்டுமே தவிர, சிறுபிள்ளைத்தனமான சாட்டுப்போக்குகளைச் சொல்லி, தனது கடமைகளை தவிர்த்துக் கொள்வதையும் சட்டத்தில் இருக்கக்கூடிய ஏற்பாடுகளை மூடி மறைப்பதையும் கவலையோடு உற்று நோக்குகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு

# குழந்தைநல வைத்திய நிபுணர்

■ மு. தமிழ்ச்செல்வன்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு குழந்தைகள் நல வைத்திய நிபுணராக டொக்டர் கஸ்தூரி ஜீவகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள்நல வைத்திய நிபுணர் இன்மையால் பிரதேசத்தில் போசாக்கின்றிய குழந்தைகள் அதிகளவில் பதிவாகி வருகின்றன என வைத்தியசாலை நிர்வாகத்தால் சுட்டிக்காட்டப்பட்டமையை அடுத்து, பிரதேச பொது மக்கள், குழந்தைகள் விடயத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர். தற்போது, இக்குறைபாடு களையப்பட்டுள்ளது.



# அக்கராயன் மேற்கில் மது விற்பனை நிலையம் திறப்பதற்கு எதிர்ப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, அக்கராயன் மேற்கில் மது விற்பனை நிலையம் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு, துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், ஆரோக்கியபுரம் பங்குத் தந்தை அருட்திரு சேகர் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில், எமது கிராமத்தில், கசிப்புக்குப் பதிலாக சாராய விற்பனை நிலையம் திறக்க இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டுமே ஒன்றுதான். ஏற்கெனவே, மது விற்பனை நிலையம் திறக்க இருந்த நிலையில், ஐந்தாண்டுகளுக்கு முன்னர் காட்டப்பட்ட எதிர்ப்பின் காரணமாக தடுக்கப்பட்டிருந்தது.

எமது கிராமத்தில் பாடசாலைகள், தேவாலயம், ஆலயங்கள், முன்பள்ளிகள் உள்ள சூழலில், மது விற்பனை நிலையம் திறப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. மாணவர்களை நேரடியாக பாதிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கூறும்போது, மது விற்பனை நிலையம் திறப்பதற்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டம் நடத்த உள்ளோம். அரச அதிகாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி உள்ளோம். தகுந்த பதில் கிடைக்காவிட்டால் தொடர் போராட்டம் இடம்பெறும் எனவும் தெரிவித்தனர்.



# சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு?

## மன்னாரில் கறுப்பு தினம் அனுஷ்டிக்க அழைப்பு

■ மன்னார் நிருபர்

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள், கறுப்பு தினமான அனுஷ்டிக்கின்றோம் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் ஒன்றிய தலைவி மனுவல் உதயசந்திரா தெரிவித்தார்.

> “ கறுப்பு தினத்தை அனுஷ்டிக்க, பொது அமைப்புகள், அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளடங்கலாக அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

மன்னாரில் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; பெப்ரவரி நான்காம் திகதி சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. எனினும் சுதந்திரம் இல்லாத நாட்டில், சுதந்திர தினம் எதற்காக? எனவே, தமிழர்களாகிய நாங்களும் குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் அன்றைய நாளை கறுப்பு தினமாக அனுஷ்டிக்க இருக்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் முன் நின்று ஏற்பாடுகளை மேற்கொண்டு உள்ளார்கள். எனவே, கறுப்பு தினத்தை அனுஷ்டிக்க, மன்னார் மாவட்ட பொது அமைப்புகள், அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளடங்கலாக அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.



# குழந்தைகளின் போசாக்கை மேம்படுத்த நன்னீர் மீன் வளர்ப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒட்டறுத்த குளம், பாலைப்பாணி, கிடாப்பிடித்த குளம் ஆகிய கிராமங்களில் வாழும் குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தும் வகையில் நன்னீர் நிலைகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஒட்டறுத்தகுளம், வண்டிக்காட்டுக்குளம், பாலைப்பாணி, கிடாப்பிடித்தகுளம் ஆகிய நான்கு குளங்களில், றகமா நிறுவனத்தின் செயற்றிட்டத்தினூடாக, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி என். ரஞ்சனாவால் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்துக்காக விவசாய அமைப்புகளில் இருந்து 10,000 மீன் விரலி குஞ்சுகளும், ரஹமாவிலிருந்து 50,000 மீன் குஞ்சுகளும் மேற்படி குளங்களில் வைப்பிடப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில், இத்திட்டத்தின் செயலாளர் நாயகமும், ரஹமா நிறுவனத்தின் பொறியியலாளருமான எம். எப் மரிக்கார், பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தான் சார்ந்த திணைக்களத்தின் வளர்ச்சிக்கு

# தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

தொழிற்சங்கங்கள், தான் சார்ந்த திணைக்களத்தின் வளர்ச்சிக்கும் அதன் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென, கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி காமினி விமலசூரிய தெரிவித்தார்.




அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 16ஆவது வருடாந்த மாநாடும், பொதுக் கூட்டமும் ஞாயிற்றுக்கிழமை (29) மாளிகைக்காடு வாவா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அஞ்சல் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் யூ.எல்.எம் பைசர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதி அஞ்சல் மா அதிபதி காமினி விமலசூரிய தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

தொழிற் சங்கங்கள் எப்போதும் முற்போக்குத் தன்மையுடன் இயங்கினால் தான் ஒரு வலுவான தொழிற் சங்கமாக இயங்க முடியும். தொழிற்சங்கங்கள் வெறுமென போராட்டங்களையும் வேறு விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமானால், அவை ஒரு வலுவான சங்கமாக அமையாது. எப்போதும் நல்லவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அந்த வகையில் அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கம், ஒரு முன்மாதிரியாக செயற்படுவதையிட்டு பாராட்டுகின்றேன். அஞ்சல் திணைக்களத்துக்கு இத் தொழிற் சங்கம் ஒரு வழிகாட்டியாக செயற்படும் என்பதில் ஐயமில்லை.

கிழக்கு மாகாணத்தில் அஞ்சல் திணைக்களத்தின் சேவையை மேலும் விஸ்தரித்து கூடிய வருமானத்தை ஈட்டுவதற்கு ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென்றார்.

கிழக்கு மாகாண முன்னாள் பிரதி அஞ்சல் மா அதிபதி திருமதி ஜெயானந்தி திருச்செல்வம், ஓய்வு பெற்றுச் சென்றுள்ள தபால் அதிபர் ரீ. குணநாதன் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு வைபவமும் நடைபெற்றது.

# அகில இலங்கை சமாதான நீதவான்

■ கனகராசா சரவணன்



ஓட்டமாவடி 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முஹம்மது பரீட் முஹம்மது நிஸாம்தீன், அகில இலங்கை சமாதான நீதிவானாக வாழைச்சேனை, மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் அல் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய வரலாற்று துறை சிறப்பு பட்டதாரியுமான இவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிவருகின்றார்.



## திருகோணமலை மாவட்ட பொங்கல் விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், திருகோணமலை மாவட்ட செயலகம், மூதூர் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய மாவட்ட பொங்கல் விழா சனிக்கிழமை (28) சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, வயலுக்கு சென்று அருவி வெட்டி பொங்கல் பொங்கும் நிகழ்வும், அறநெறி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

சிதைவடைந்துவிட்ட

# ஆலங்குளம் சிவாலயத்தில் பொங்கல் விழா

■ வி.ரி. சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பழைமையான சிதைவடைந்த ஆலயமாகக் காணப்படும் ஆலங்குளம் சிவாலயத்தில் சனிக்கிழமை (28) பொங்கல் விழா நடைபெற்றது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆலங்குளம் ஆலய நிர்வாகிகளுடன் இணைந்து இப்பொங்கல் விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகஸ்தர் கு. ஜெயராஜ், அனைத்து ஆலயங்களின் தலைவர் கு. வடிவேல் உட்பட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், சிலம்பம், யோகாசனம் போன்றவற்றை வளவாளர் குமாரதாசன் நிகழ்த்தியதோடு வளத்தாப்பிட்டி சத்திய சாயிசேவா நிலையத்தினரின் பஜனையும் இடம்பெற்றது.





மகாத்மா காந்தியின் சிரார்த்த தினம்

# மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

■ ஏ.எச்.ஏ ஹூஸைன்

மகாத்மா காந்தியின் 75 ஆவது சிரார்த்த தினம், மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள காந்தியடிகளாரின் நினைவுத் தூபியில் திங்கட்கிழமை(30) அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி அ. செல்வேந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க. பாரதிதாசன், மட்டக்களப்பு வர்த்தக சங்க செயலாளர் கே. தியாகராஜா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார்கள்.

# இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம்

■ கே.எல்.ரி யுதாஜித்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி முத்துலிங்கம் கணேசராசா உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

வெல்லாவெளியில் முத்துலிங்கம் அன்னபூரணம் தம்பதியின் புதல்வரான இவர், வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் பட்டிருப்பு பாடசாலையில் உயர்கல்வியையும் கற்று, பேராதனை பல்கலைக்கழகத்தில் வணிகமாணி சிறப்புப் பட்டம் பெற்றார்.

1993ஆம் ஆண்டு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை இறைவரி சேவையில் வரிமதிப்பாளராக இணைந்துகொண்ட இவர், வரியியலில் வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர், மட்டக்களப்பு பிரசைகள் அமைப்பின் துணைத் தலைவர், சர்வதேச ரோட்டரிக் கழகம், மட்டக்களப்பு புற்றுநோய் அமைப்பு, விவேகானந்த நற்பணி மன்றம், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் போன்றவற்றினூடாக சமய சமூகப் பணிகளிலும் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

# மது போதையில் தள்ளாடிய பிக்கு மாணவர்கள் அறுவர் கைது

ஷேன் செனவிரத்ன

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்குகள் என தம்மை இனங்காட்டிக்கொண்டு, அதிக மதுபோதையில் சாதாரண உடையில் இருந்த 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி நகரில் நேற்று (30) அதிகாலை 1 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, கண்டி மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய குறித்த 6 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கான அடையாள அட்டையும் காணப்படாமையால் கைதுசெய்யப்பட்டு மேற்கொண்ட விசாரணைக்கு அமைய குறித்த 6 பேரும் பல்கலைக்கழகங்களில் கல்விக் கற்கும் பிக்கு மாணவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இதில் ஐவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கற்பவர்கள் என்பதுடன், ஒருவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கற்பவர் என்றும் தங்காலை, காலி, பிலிமத்தலாவை, நுவரெலியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 6 பேரும் மதுபோதையில் இருந்ததாகத் தெரிவித்த பொலிஸார், அவர்கள் தமது அடையாள அட்டைகளை பொலிஸாரிடம் காண்பிக்கும் வரை தடுத்து வைக்கவும் அடையாள அட்டையை காண்பித்த பின்னர் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

யூக்கலிப்டஸ் மரங்களால் கிடைக்கும் இலாபத்தை

# தோட்ட நிர்வாகங்கள் மாத்திரமே அடைவதாக குற்றச்சாட்டு

துவாரகஷன்

பெருந்தோட்டங்களிலுள்ள யூக்கலிப்டஸ் போன்ற மரங்களை வெட்டி, வெளியாட்களுக்கு விற்பனை செய்வதில் தோட்ட நிர்வாகம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

குறிப்பாக அக்கரப்பத்தனை, டொரிங்டன், பெல்மோரல், லிந்துலை, டயகம, பொகவந்தலாவ உள்ளிட்ட பிரதேசங்களில் இவ்வாறு மரங்கள் தறிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் தோட்ட நிர்வாகங்களுக்கு பல கோடி ரூபாய் வருமானம் கிடைத்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இதன்மூலம் எவ்வித பயனும் கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், மரங்கள் தறிக்கும் போது, ஆயிரம் கணக்கான தேயிலை



செடிகளும் அழிவடைவதுடன், தொழிலாளர்களின் தொழில் வாய்ப்பு பாதிக்கப்படுகிறது.

சில தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை ஏமாற்றும் வகையில் ஆலயங்களுக்கு சிறு தொகை நிதியையும் தோட்டத் தலைவர்களுக்கும் சிறிய தொகை பணத்தை வழங்கி, குழுவாக இணைந்து அப்பாவி தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுகின்றனர்.

வெட்டப்பட்ட பாரிய மரங்களை ஏற்றிச்செல்லும் பொழுது, பாதைகள் உடைந்து சேதமாகி யாரும் கண்டு கொள்ளாத நிலையில் பாதைகள் கைவிடப்படுகின்றன.

ஆயிரக்கணக்கான மரங்கள் தறிக்கப்பட்டாலும் அதற்குப் பதிலாக ஒரு மரக்கன்று கூட நடுவதற்கு நிர்வாகம் முன்வருவதில்லை. எனவே மரங்கள் வெட்டப்பட்டாலும் அதில் கிடைக்கும் இலாபத்தில் இம்மக்களுக்கு ஒரு தொகை பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, பாதிக்கப்பட்ட பெருந்தோட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.






## விழிப்புணர்வு கருத்தரங்கு



Fian SriLanka அரசசார்பற்ற அமைப்பின் ஏற்பாட்டில், கொட்டகலை கிரின் இல் விருந்தகத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் உணவுச்சட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. அமைப்பின் இணைப்பாளர் சமிந் தர்ஷன ஏமாந்த தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

(துவாரகஷன்)

# ஆட்லோ த.வியில் நால்வர் சித்தி

துவாரகஷான்

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டம் மூன்று ஹோல்புறூக் நு/ ஆட்லோ தமிழ் வித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 13 மாணவர்களில 04 மாணவர்கள் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

இதற்கமைய, சுரேஷ்குமார் டில்சான்- 157, காளிதாஸ் மானாசா -150, ராமகிருஷ்ணன் அசான் -149, ஆறுமுகம் உமேஷ் -149 என்ற புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

# பள்ளிவாசல் முன் மோட்டார் சைக்கிளை கைவிட்டு

# மாயமான இருவருக்கு வலைவீச்சு



ரஞ்சித் ராஜபக்ஷ

மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத போலி வாகன இலக்கத்துடனான மோட்டார் சைக்கிளொன்றை நிறுத்திவிட்டு மாயமான இருவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகில் குறித்த மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைத்துவிட்டு பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் புத்தளம் பகுதியிலிருந்து பாடசாலையொன்று நிதி சேகரிப்புக்காக 21ஆம் திகதி ஹட்டனுக்கு வருகைத் தந்த பின்னர், பள்ளிவாசலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வாடகை அறையொன்றில் தங்கியிருந்துள்ளனர்.

பள்ளிவாசல் நிர்வாகத்தின் அனுமதியின்றி சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, 24ஆம் திகதி வரை ஹட்டன் பகுதியில் தங்கியிருந்து, நிதியுதவி பெற்று அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலின் செயலாளர் மொஹமட் ஃபௌமி தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசலுக்கு அருகில் உரிமையாளர் அற்ற மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டமை தொடர்பில், நிர்வாகத்தால் ஹட்டன் பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவின் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு சோதித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஹட்டன் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிளில் காணப்பட்ட இலக்கத் தகடு தொடர்பில் ஹட்டன் பொலிஸார் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது, குறித்த மோட்டார் சைக்கிள் மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோட்டார் சைக்கிள் வேறு குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும், மோட்டார் சைக்கிளில் வந்த இரு சந்தேக நபர்களை கைது செய்யவும் ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சோலன்ஸ் தோட்ட தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது

ராமு தனராஜா

இந்த மாதம் 1ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த லுணுகலை சோலன்ஸ் தோட்டத் தொழிற்சாலை, நேற்று (30) காலை மீண்டும் திறக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகத்தால் மூடப்பட்ட குறித்த தொழிற்சாலையை மீண்டும் திறக்கக் கோரி, தோட்டத் தொழிலாளர்கள் இந்த மாதம் 25ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே, தொழிற்சாலையை திறக்க நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, தோட்ட நிர்வாகத்தால் நேற்று (30) காலை குறித்த தொழிற்சாலை திறக்கப்பட்டது.



# சித்தி

2022ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில், பொகவந்தலாவை, ஹொலிரோசரி தமிழ் மகா வித்தியாலய மாணவி, விதுஷனா தமிழழகன் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



# மாவனெல்லையில் தைப்பொங்கல் விழா

என்.ஆராச்சி

மாவனெல்ல பிரதேச செயலகத்தில் தைப்பொங்கல் விழா, பிரதேச செயலாளர் விஜயானி ரத்னசேகர தலைமையில் மாவனெல்ல ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் அண்மையில் கொண்டாடப்பட்டது.

மாவனெல்ல பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.





# புதிய இரத்தினக்கல் சந்தை திறப்பு

சுமணசிறி குணதிலக

ஊவா மாகாணத்திலுள்ள இரத்தினக்கல் அகழ்வாளர்களுக்கு உரிய விலையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், இரத்தினக்கல் கொள்வனவு சந்தை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்ப தொழில் இராஜாங்க அமைச்சு ஊடாக பதுளை நகரில் குறித்த தொழிற்சந்தையொன்று திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்ப தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவால் பதுளை செனரத் பரணவிதான நூலகத்துக்கு முன்பாக குறித்த சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தச் சந்தை கூடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சாரதியின் சாமர்த்தியம் விபத்தை தடுத்தது

ராமு தனராஜா

பதுளை - கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், விபத்திற்குள்ளாகவிருந்த நிலையில் சாரதியின் சாமர்த்தியத்தால் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

குறித்த பஸ், பெரகல -வியாரகல வீதியில் நேற்று (30) பயணிக்கையில் பஸ்ஸின் வேகத்தடுத்து இயங்காமல் போயுள்ளது.

இந்த நிலையில், சாரதி உடனடியாக வீதியோரம் இருந்த கானுக்குள் பஸ்ஸை சரித்து நிறுத்தியுள்ளார்.

இதனால் பெரும் விபத்தொன்று தடுக்கப்பட்டதாக பயணிகள் தெரிவித்தனர்.

# தனது குழந்தையை படுகொலை செய்வதற்கு இந்தியா இடமளிக்குமா?

இலங்கை அரசியலமைப்பில் இதுவரையிலும் 22 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன, அதில், 13ஆவது திருத்தம் விசேடமானதாகும். இந்திய - இலங்கை ஒப்பந்தந்தின் பிரகாரம், அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவுக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி, ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன் பிரகாரமே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம், இலங்கையை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று, வடக்கு கிழக்கை, தமிழ், முஸ்லிம் மக்களின் இணைந்த தாயகப்பிரதேசமாகவும் தமிழ் மொழியை அரச மொழியாகவும் ஏற்று, மாகாண சபைகளூடாக அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைத்திருக்கிறது.

அதில், வடக்கு, கிழக்கு மாகாணங்கள், அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப்பூர்வமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கிகரித்துள்ளது.

அத்துடன், இலங்கை அரசாங்கம் அருகருகேயுள்ள மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாகச் சேர்த்துக் கொண்டது. அதனடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு வடகிழக்கு மாகாணமானது. எனினும், உயர்நீதிமன்றத்தில் ஜே.வி.பி தாக்கல் செய்த மனுவின் ஊடாக, வடகிழக்கு மாகாணம், வடக்கு, கிழக்கு மாகாணங்களாக பிரிக்கப்பட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில், வடக்கு, கிழக்கு என்று அவற்றைப் பிரிக்கும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவது என்று கூறப்பட்டாலும், வடகிழக்கை பிரித்ததன் பின்னர் அவ்வாறான வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பதை நினைவூட்டுகின்றோம்.

இந்நிலையில்தான், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த பகிரங்க அழைப்பை ஏற்று, சில தமிழ்க்கட்சிகள் பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருந்தனர். இறுதியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில், 13ஆவது திருத்தத்தை அமல்படுத்தவேண்டும்; இல்லையேல் இல்லாமல் செய்யவேண்டுமென அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

அதன்பின்னர், 13ஆவது திருத்தம் தொடர்பிலான கருத்துகள் பொதுவெளியில் விவாதிக்கப்படுகின்றன. 13ஐ அமல்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளியோம் என மகா சங்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில், 13ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. அந்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தியே ஆகவேண்டும். இந்த நிலைப்பாட்டிலேயே இந்தியா இருக்கிறது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபையே தேவையில்லை எனக் கூறிய தென்னிலங்கையைச் சேர்ந்த இனவாத கட்சிகள், அந்தத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றியீட்டி சுகபோகங்களை அனுபவித்து வந்தனர். மாகாண சபைத் தேர்தலை நடத்தமுடியாத அளவுக்கு முடிச்சு போடப்பட்டுள்ளது; அதனை அவிழ்க்கவேண்டும்.

இவ்வாறான ஓர் இக்கட்டான சூழ்நிலையில், தம்பக்கமே பந்து உள்ளது என்பதை இந்தியா நினைவில் கொள்வது அவசியம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# 'இது நடக்குமா, சாத்தியமா?'

மொஹமட் பாதுஷா

இப்போது யார் யாரை சந்தித்தாலும் அவர்களை அறியாமலேயே முதலில் கேட்கும் கேள்விதான் 'நடக்குமா' என்பது. தேர்தல் பற்றிய இந்தக் கேள்வி, அவர்களை அறியாமலேயே முன்னே வந்து விழுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்து, திகதியும் அறிவிக்கப்பட்டு விட்டாலும் மக்கள் மனங்களில் மட்டுமன்றி வேட்பாளர்கள், அரசியல் தலைவர்கள் மனங்களிலும் 'திட்டமிட்டபடி' வாக்கெடுப்பு நடக்குமா என்பதில் இன்னும் சந்தேகம் இருக்கவே செய்கின்றது.

நாடு பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு குடும்பத்திலும் இதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, தேர்தல் ஒன்றை மக்கள் வேண்டி நின்ற காலம் போல, இக்காலம் இல்லை என்பதே நிதர்சனமாகும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக நமது ஆட்சியாளர்கள், தம்முடைய வெற்றிகளும் எதிர்கால அரசியல் இருப்பும்தான் நிலைப்பாடாகக் கொண்டு அலைகிறார்கள்.

ஒரு ஜோசியக்காரன், இனவாதிக்கு இருக்கின்ற செல்வாக்கின் அளவுக்குக் கூட, மக்கள் நலனோ நாட்டு நலனோ அவர்களது இறுதித் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தவில்லை என்பதையே கடந்த காலங்களில் கண்டிருக்கின்றோம்.

இதையெல்லாம் தாண்டி, இப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. வாக்களிப்பு சீட்டுகள் அச்சிடும் கட்டம் வரை, இந்தச் செயன்முறை வந்த பிறகும், மார்ச் ஒன்பதில் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் இன்னும் முழுமையாகத் தீரவில்லை.

மக்களைப் பொறுத்தமட்டில், 'இது நடக்குமா, சாத்தியமா?' என்ற கேள்வி வெறுமனே தேர்தலுடன் மட்டும் தொடர்புபட்டதல்ல; நாட்டில் இடம்பெறுகின்ற பல விவகாரங்கள் தொடர்பில், இவ்வாறான கேள்விகள் மக்கள் மனங்களில் இருக்கவே செய்கின்றன.

'நடக்குமா?' என்ற வினா, சில நேரங்களில் ஒரு சந்தேகமாகவும், சிலபோதுகளில் ஓர் ஏக்கமாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் முன்வைக்கப்படுவதாகச் சொல்லலாம்.

குறிப்பாக, இந்த நாட்டில் ஒரு நல்ல அரசியல் மாற்றமும், கட்டமைப்பு முறைமை மாற்றமும் நடக்குமா என்ற கேள்வி, மக்களிடம் நீண்டகாலமாக இருக்கின்றது. மக்களை உண்மையாக நேசிக்கும், ஊழலற்ற ஆட்சியாளர்கள் எப்போது உருவாகுவார்கள் என்ற ஏக்கம், மக்கள் மனங்களில் உள்ளது.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் எப்போது தீரும்? அது மிகக் கிட்டிய காலத்தில் நடப்பது சாத்தியமா? நமது பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகப் போகின்றது போன்ற கேள்விகள் ஒவ்வொரு குடும்பத் தலைவனிடமும் தலைவியிடமும் உள்ளன.

அப்பாவி மக்களின் தவறுகளுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேகத்தில், பெரும் ஊழல்வாதிகள், நாட்டைக் கொள்ளையடித்தவர்கள், அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள், இனவாதிகள் போன்ற தரப்பினருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படாதது ஏன் என்ற கேள்வி மக்களிடத்தில் இன்னுமிருக்கின்றது.

நிகழ்காலத்தை எடுத்துக் கொண்டால், பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை நிர்வகிப்பதற்காக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு என்ற ஒன்றை நிறுவிவிட்டு, மின்சார சபை மற்றும் அரசியல்வாதிகள் ஆணைக்குழுவின் அறிவுரைகளை அதனது அறிவுறுத்தல்களை புறக்கணித்துச் செயற்படுவது ஏன் என்ற கேள்வி உள்ளது,

உயர்தரப் பரீட்சை நடந்து கொண்டிருக்கும் காலத்தில் கூட, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் புறக்கணித்து அரச கட்டமைப்பு செயற்படுவது எந்த அடிப்படையில் நியாயம் எனத் தெரியவில்லை. இப்படி உலகில் வேறெங்கும் நடக்குமா என்றும் தெரியவில்லை.

இவ்வாறு ஓர் ஆணைக்குழுவை அரச கட்டமைப்பே புறக்கணித்துச் செயற்படுமானால், நாட்டு மக்கள் சட்டத்தை, அதிகாரிகளை, ஒழுங்குவிதிகளை மதித்து நடப்பார்களா?

மத்திய வங்கி கொள்ளை உள்ளடங்கலாக பெரிய திருடர்கள், ஊழல் பெருஞ்சாளிகள் தப்பித்துக் கொள்வார்கள் என்றால், பசிக்காக தேங்காய் திருடும் ஒருவனின் விடயத்தில் எவ்வாறு சட்டத்தை நிலைநாட்ட முடியும்? சாதாரண மக்கள் சட்டத்தை மதிப்பார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இவ்வாறு விடை தெரியாத அநேக கேள்விகள், மக்கள் மனங்களில் இருந்தாலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டபடி நடக்குமா என்ற கேள்வி முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும்.

இங்கு நன்றாக கவனிக்க வேண்டிய சொல் 'திட்டமிட்டபடி' என்பதாகும். அதாவது, ஆட்சியாளர்கள், அதிகார தரப்பினர் உள்ளடங்கலாக நாட்டின் ஆளுகையை தீர்மானிக்கும் வர்க்கம், மனதில் வைத்துள்ள 'திட்டம்' என்ன என்பதுதான் இங்கு முக்கியமாகும்.

நமக்குச் சொல்லப்பட்ட திட்டம்தான் அவர்களது உள்மனங்களில் உள்ள திட்டமா, இரண்டும் வெவ்வேறு திட்டங்களா, திட்டம் ஏ, திட்டம் பி என திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்ற கேள்விக்கு விடை தெரிந்தால், தேர்தல் மார்ச் ஒன்பதாம் திகதி நடக்குமா என்பது சுலபமாக தெரிந்து விடும்.

இந்தச் சூழ்நிலையிலும் தேர்தல் நடக்குமா என்ற கேள்வி, மக்கள் மனங்களில் இருப்பதற்கும், நடக்கும், நடக்காது என எல்லோரும் ஆளுக்கொரு விதமாக இவ்விடயத்தைப் பேசிக் கொள்வதற்கும் பல விவகாரங்கள் காரணமாகியுள்ளன.

முதலாவது, வெளிப்படையாகக் காணப்படும் பொருளாதார நெருக்கடி. அதாவது, இப்போதிருக்கின்ற இக்கட்டான நிலையில், தேர்தலை நடத்துவதற்கும் அதன் பிறகு உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கும் ஏற்படும் செலவை சமாளிப்பது எப்படி என்ற பிரச்சினையாகும்.

இரண்டாவது, உறைநிலையில் உள்ள அரசியல் குழப்பங்கள். மொட்டுக் கட்சி, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி அவரைக் கொண்டாடுகின்ற போதிலும், உள்ளூராட்சி சபைகளில் தமக்கு ஆதரவு அதிகம் இருக்கும் என்ற நம்பிக்கையில், இந்தத் தேர்தலை தமது அடுத்த யுக அரசியல் பயணத்துக்கான அடித்தளமாக பயன்படுத்த முனைகின்றது.

தூர்ந்துபோன ஐக்கிய தேசிய கட்சியை கொஞ்சமேனும் தூக்கி நிறுத்த ஒரு வாய்ப்பாக, ரணில் விக்கிரமசிங்க இதைப் பயன்படுத்த முனைவதாக தெரிகின்றது. ஆனால், ஐ.தே.கவுக்கு எந்தச் சிறிய வெற்றி கிடைத்தாலும் அது, இப்போதைய நிலையில் அவர்கள் கணக்கில் இலாபம்தான்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் இந்தக் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க கணக்குப் போட்டுக் கொண்டிருக்கலாம். எனவே, இந்தத் தேர்தலின் முடிவுகள் அடுத்த தேர்தலில் தாக்கம் செலுத்தும் என்ற நிலையில், அரசாங்கம் துணிந்து தேர்தலுக்கு முகம் கொடுக்குமா என்ற ஐயப்பாடு உள்ளது.

தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்த ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்க, அரசாங்கத்தில் உள்ள சிலர் வேறு கதைகளை கூறிக் கொண்டிருப்பதும் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதும் வெளிப்படையானது. அத்துடன், தேர்தலை நடத்த முன்நிற்கும் ஆணைக்குழு உறுப்பினர்கள் அச்சுறுத்தப்படுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

காலநீட்டிப்புக்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் இன்னும் முடிவடையவில்லை. அத்துடன் தேர்தல் திகதி தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளியாகவில்லை.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்ற தேர்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தேவையான வர்த்தமானி அறிவித்தல், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பத்துடன் அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

தேர்தல் திகதியை தீர்மானிக்கும் கூட்டத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களில் மூவர் கலந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது. இது, இந்த முடிவின் சட்டவலுத்தன்மை பற்றிய கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், ஆணைக்குழு உறுப்பினரான திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸின் இராஜினாமாவும் மூன்று உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தலும் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

இவற்றையெல்லாம் ஒரு கோர்வையாக நோக்குகின்ற போது, தேர்தல் நடக்காது என்றே பலரும் அனுமானிக்கின்றனர். பொது மக்களும் அவ்வாறான கருத்துகளையே தமக்கிடையில் பகர்வதை காணக்கூடியதாக உள்ளது.

ஆனால், எது எவ்வாறிருப்பினும் விரும்பியோ விரும்பாமலோ தேர்தல் ஒன்றை நடத்தியாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசாங்கம் இருக்கின்றது. அதற்கும் பல காரணங்கள் உள்ளன.

மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் ஆட்சிக்காலம் முடிவடைந்து விட்டது. இருப்பினும் மாகாண சபை தேர்தலை நடத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. எனவே, இந்தத் தேர்தலையாவது நடத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்தியா 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துமாறும் மாகாண சபை தேர்தலை நடத்துமாறும் கோரி வருகின்ற நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் கொஞ்ச காலத்தை கடத்தலாம். இல்லாவிட்டால், நேரடியாக மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அத்துடன், இலங்கை அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கும் அதன்மூலம் மக்களின் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கும் பின்வாங்குகின்றது என்ற தோற்றப்பாடு உருவாகும். ரணில் அரசாங்கத்தின் சர்வதேச உறவுகளில் இது பாதகமான விளைவுகளை உண்டுபண்ணலாம்.

சுருக்கமாகச் சொன்னால், நீதிமன்ற வழக்கின் ஊடாக அல்லது அரசியலமைப்பு சட்டம் ஊடாக தடைகள் ஏதும் வந்தால் தவிர, அதிகாரத்தில் இருப்பவர்கள் தேர்தலை நடத்த வேண்டும் என்று நினைத்தால் தேர்தல் நடக்கும்; இல்லையென்றால். தேர்தல் நடக்காது. அவ்வளவுதான்!

தேர்தல் நடக்குமா என்ற இந்தக் கேள்விக்கு விடை கிடைத்தாலும், எது நடந்தாலும் உண்மையாகவே மக்கள் நலன் சார்ந்த ஒரு கட்டமைப்பு மாற்றம் நடக்குமா என்ற கேள்விக்கு கடைசி வரையும் விடை கிடைக்கப் போவதில்லை.



## வாழ்வியல் தரிசனம்

காதலில் விடுதலை ஏது? ஆனால், இன்பமூட்டும் உணர்வுடையது; ஆர்வம் மிகுந்தால் நோயுமாகிறது. தொடர்ந்து இயங்கும்போது மனம் பேதலிக்கின்றது. எனவே, காதல், மோகம் என்பன சந்தோஷமான ஈர்ப்பு மழை.

அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் என்றுமே விலகாத பிணைப்பு வேண்டும். தூய காதல் நல்வாழ்வை எளிதாக்குகின்றது.

காதல் இயற்கையின் மழை; இது இயற்கையின் உஷ்ணம். கோபத்தையும் உருவாக்கும்; தாபத்தையும் வளர்க்கும். ஏக்கங்களைப் பெரிதாக்கும். இன்பங்கைளயும் துன்பங்களையும் மாறிமாறிச் சுமக்கும்.

காதலுடன் காமத்தைக் கலந்து, புதுஉலகில் புகுந்திட வைக்கின்றது. உலகத்தின் அழகு கோலத்தை விரிவாக்கிப் பரப்பும் கனிவும் உண்டு; இறுக்கமும் உண்டு.

எனினும் உண்மையான நெஞ்சம் இல்லாதுவிடின், நல்ல அன்புக்கு எதிராகவும் தூரமாகியும் விடுகின்றது.

கனவுக்கு அப்பாற்பட்டது; நனவில் என்றும் புதிதானது. வெறும் மயக்கம் அல்ல; வாழ்க்கையில் தெளிவையும் அதேசமயம் துன்பங்களின் வீச்சையும் உடைக்கவல்லது.

அன்பின் நீளம் மிகநீளமானது. முடிவு அற்ற நிரந்தரம் சுதந்திரமானது. ஆனால், விலகமுடியாத பந்தம். இதை முழுமையாக எழுதமுடியாது. உணர்வோடு புகுந்தது. ஈர்ப்பு விசையிலும் தாக்கம் கூடியது. வல்லமையின் உயரம்.

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தருமபுரம் மகா வித்தியாலயம்:

### சேதமடைந்த மலசல கூடங்களால் மாணவர்கள் அசௌகரியம்

கிளிநொச்சி, தருமபுரம் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் பயன்பாட்டுக்கான மலசல கூடங்கள் சேதமடைந்தும் தண்ணீர் வசதிகள் இன்றியும் காணப்படுவதால், அவற்றைப் பயன்படுத்த முடியாது, மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள தருமபுரம் மகா வித்தியாலய வளாகத்தில், மாணவர்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் நீர் விநியோக இணைப்புகள் இன்றியும் இணைப்புகள் சேதமடைந்தும் மலசல கூடங்களின் கூரைகள் சேதமடைந்தும் மாணவர்களின் சுகாதாரத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் தீங்குவிளைவிக்கும் வகையில் காணப்படுவதால், மாணவர்கள் இந்த மலசலகூடங்களைப் பயன்படுத்த முடியாத நிலையில் அசௌகரியங்களை அனுபவிக்கின்றார்கள்.

இவ்வாறு மலசல கூடவசதிகள் இன்மை காரணமாக, பாடசாலை நேரங்களில் மாணவர்கள் இயற்கை கடன்களை நிறைவேற்றுவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, இந்நிலைமை குறித்து, பொறுப்புகூறவேண்டிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாடசாலை சமூகம் கோரிக்கை விடுக்கின்றது.

யது பாஸ்கரன்

# ரம்யா பாண்டியனின் வித்தியாசம்



தமிழில், டம்மி டப்பாசு, ஜோக்கர், ஆண் தேவதை உள்ளிட்ட படங்களில் நடித்த ரம்யா பாண்டியன், போட்டோஷூட் மூலம் மிகவும் பிரபலமானார்.

பின்னர் சின்னத்திரை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அவர், பிக்பாஸ் நிகழ்ச்சியின் 4-வது சீசனில் போட்டியாளராக களமிறங்கி இறுதிப்போட்டி வரை முன்னேறினார். இந்நிகழ்ச்சி மூலம் அவரது ரசிகர்கள் வட்டம் பெரிதானது.

இவர் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான ‘இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்’ திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. சூர்யாவின் 2டி எண்டெர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்த இப்படத்தில் ரம்யா பாண்டியனின் நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது.

அவ்வப்போது ரம்யா பாண்டியன் தனது புகைப்படங்களை சமூகவலைத்தள பக்கத்தில் வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்து வரும் ரம்யா பாண்டியன், தற்போது வெளியிட்டிருக்கும் வித்தியாசமான உடையில் இருக்கும் புகைப்படம் இணையத்தில் பலரையும் கவர்ந்து லைக்குகளை குவித்து வருகிறது.




# வசூல் மழையில் பதான்



இயக்குனர் சித்தார்த் ஆனந்த் இயக்கத்தில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்திருக்கும் படம் “பதான்”. இப்படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடிகை தீபிகா படுகோனே நடித்திருக்கிறார்.

இப்படத்தில் இடம்பெற்ற ‘அழையா மழை’ பாடலில் ஷாருக்கானுடன் தீபிகா படுகோனே காவி நிற நீச்சல் உடையில் ஆடிய வீடியோ இந்துக்கள் மனதை புண்படுத்தி உள்ளதாகவும், படத்தை தடை செய்ய வேண்டும் என்றும் எதிர்ப்புகள் கிளம்பின.

மேலும் படத்தின் மீதான எதிர்ப்பார்ப்புகளும் அதிகரித்தன. பல



எதிர்ப்புகளுக்கு மத்தியில் இப்படம் கடந்த 25-ஆம் திகதி இந்தியா முழுவதிலும் 8000 திரையரங்குகளில் வெளியானது.

இந்நிலையில் பதான் படம் வெளியான நான்கு நாட்களில் பாக்ஸ் ஆபிஸில் ரூ.402 கோடிக்கு மேல் வசூல் செய்து சாதனை படைத்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ரஜினியின் தடை



நடிகர் ரஜினியின் ஒப்புதல் இல்லாமல் அவரது பெயர், புகைப்படம், குரல் பயன்படுத்த தடை என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பயன்படுத்தினால் உரிமையியல் மற்றும் குற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ரஜினி சார்பில் வழக்கறிஞர் இளம் பாரதி பொது அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

சில நிறுவனங்கள் பிரபலமடைய ரஜினி பெயர் , புகைப்படம் ,குரலை அனுமதியின்றி பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் ரஜினி சார்பில் வழக்கறிஞர் இளம் பாரதி இந்த பொது அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

# வதந்திக்கு முற்றுப்புள்ளி



தமிழ் சின்னத்திரையில் விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் பிரபலமான சீரியல் பாக்கியலட்சுமி. இந்த சீரியலில் ராதிகா என்ற கதாபாத்திரத்தில் ஜெனிபர் நடித்து வந்த நிலையில் கர்ப்பம் காரணமாக அவர் சீரியலை விட்டு வெளியேறினார்.

அதன் பிறகு அவருக்கு பதிலாக ராதிகா என்ற கதாபாத்திரத்தில் ரேஷ்மா நடிக்க ஒப்பந்தமானார். இப்படியான நிலையில் தற்போது ரேஷ்மாவும் இந்த சீரியலில் இருந்து விலகப் போவதாக தகவல் பரவியது.

காரணம் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக உள்ள சீதா ராமன் என்ற சீரியலில் செம்பருத்தி ஆகிலாண்டீஸ்வரி போன்ற ஒரு வெயிட்டான கதாபாத்திரத்தில் நடிக்க கிடைத்த வாய்ப்பு தான் என சொல்லப்பட்டது.

மேலும் இனி ராதிகா கதாபாத்திரத்தில் வனிதா நடிக்கப் போகிறார் எனவும் சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இப்படியான நிலையில் அது துளி கூட உண்மை இல்லை ராதிகா கதாபாத்திரத்தில் தொடர்ந்து ரேஷ்மா தான் நடிக்கப்



போகிறார் என பாக்கியலட்சுமி சீரியல் குழு விளக்கம் அளித்துள்ளது.



# ஆர்.ஜேவின் ஆசை

ஆர்.ஜே.பாலாஜி ஏற்கனவே எல்.கே.ஜி, மூக்குத்தி அம்மன், வீட்ல விசேஷம் ஆகிய படங்களில் நடித்துள்ளார். தற்போது ‘ரன் பேபி ரன்’ படத்தில் நடித்து இருக்கிறார்.

இப்படம் குறித்து அவர் கூறும்போது. “எனது முதல் படத்தில் அரசியலும், 2-வது படத்தில் ஆன்மிகமும் இருந்தது. ரன் பேபி ரன் திரில்லர் படமாக தயாராகி உள்ளது.

ஜியன் கிருஷ்ணகுமார் இயக்கியிருக்கும் ரன் பேபி ரன் வேறு களம். இந்த படம் இருக்கை நுனியில் அமர வைக்கும் சஸ்பென்ஸ் திரில்லராக உருவாகி உள்ளது. சிவகார்த்திகேயன், சந்தானம் என்று யாரையும் போட்டியாக நினைக்கவில்லை.

நான் படங்களில் நடிப்பது அதிர்ஷ்டம். எனக்கு நீண்ட தூரம் ஓடவேண்டும். எல்.கே.ஜி, மூக்குத்தி அம்மன் படங்களின் இரண்டாம் பாகம் எடுப்பேன். புதிதாக சிங்கப்பூர் சலூன் உள்பட 3 படங்களில் நடிக்கிறேன்.

ஊரடங்கில் எல்லோரும் திரில்லர் படம் பார்த்து பழகி விட்டனர். அதனால் இப்போது விதவிதமான திரில்லர் படங்கள் வருகின்றன. மைக்கேல் மதன காமராஜன் மாதிரி ஒரு படத்தில் நடிக்க ஆசை உள்ளது” என்றார்.





ஜம்மு காஷ்மீர்

# ராகுலின் நடைபயணத்துக்கு முற்றுப்புள்ளி


காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி அண்மையில் ‘இந்திய ஒற்றுமை பயணம்’ என்ற பெயரில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, பாதயாத்திரையொன்றை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் கன்னியாகுமரியில் கடந்த செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி தொடங்கிய இப்பாத யாத்திரையானது ‘தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், மராட்டியம் ,ஹரியானா ஆகிய மாநிலங்களைக் கடந்து நேற்றைய தினம் காஷ்மீரில் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நிகழ்வில் சுமார் 12 எதிர்க்கட்சிகள் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ராஜபாளையம்

# சிறுவனுடன் ஓட்டம் பிடித்த காதல் மனைவி



விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தை சேர்ந்தவர் மகாலட்சுமி. இவர் அருகில் உள்ள செங்கல் சூலையில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ‘மகாலட்சுமியைக் காணவில்லை‘ என அவரது கணவர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த செங்கல் சூளையில் பணியாற்றிவந்த 17வயதுச் சிறுவனொருவனும் அதேநாளில் காணாமற்போயுள்ளான் என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் காணாமற்போன இருவரும் கன்னியாகுமாரியில் ஒன்றாக வசித்து வருவதாகப் பொலிஸாருக்குக் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் போக்சோ சட்டத்தின் கீழ் மகாலட்சுமியைக் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான்

# எதற்காக திருடினேன் தெரியுமா?

## 2 பக்கங்கள் கடிதம் எழுதிய திருடன்




ராஜஸ்தான் மாநிலம், ஜெய்சாலேமார் மாவட்டத்தில் கோமாராம் இனிப்பு கடை நடத்தி வந்துள்ளார்.

ஜனவரி 24ஆம் திகதி, கடையில் பணம் திருடப்பட்டு இருப்பதுடன் திருடன், உரிமையாளருக்கு 2 பக்கங்களில் கடிதம் ஒன்றையும் எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளான்.

அக்கடிதத்தில், ‘ஹலோ சார், நான் உங்கள் கடைக்கு திருடுவதற்காக நுழையவில்லை. எனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ளவே வந்தேன். நான் உணவருந்தி இரண்டு நாட்கள் ஆகின்றன. ஒரே பசியாக இருந்ததால், உங்கள் கடைக்கு உணவருந்த வந்தேன். நீங்கள் ஏழை என்பதை நான் அறிகிறேன். அதனால் தான் ஆறுதல் கூறுவதற்காக இந்த கடிதத்தை எழுதுகின்றேன். எனது காலில் அடிபட்டுள்ளதால் அதற்கு பணம் தேவைப்படுகிறது. எனவே, உங்கள் பணப்பெட்டியில் இருந்த 7000ரூபாய் பணத்தையும் எடுத்துக்கொண்டேன். நீங்கள் இது குறித்து பொலிஸாரிடம் புகார் தெரிவிக்க வேண்டாம். ஏன் என்றால் நான் உங்கள் விருந்தாளி’ இவ்வாறு எழுதியுள்ளான்.

நீலகிரி

# ஒஸ்காரில் இடம்பிடித்த ‘முதுமலை யானைகள்’




நீலகிரி மாவட்டம்,முதுமலை புலிகள் காப்பகத்தில் படமாக்கப்பட்ட ‘தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்‘ (The Elephant Wisperers) என்ற ஆவணப்படமானது இவ்வருடம் நடைபெறவுள்ள 95 ஆவது ஒஸ்கார் விருதுக்கான இறுதிப்பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

‘தாயிடம் இருந்து பிரிந்து தவிக்கும் குட்டியானைகளைப் பராமரிக்கும் பழங்குடியின தம்பதியின் யதார்த்த வாழ்க்கையை மையமாகக் கொண்டு‘ இவ் ஆவணப்படம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருவனந்தபுரம்

# பாலியல் கல்வி ஆரம்பம்: மாணவிகளின் வருகை அதிகரிப்பு



கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் உள்ள பிரபல கல்லூரியொன்றில் நேற்று முன்தினம் மாணவர்களுக்காக பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஏறத்தாழ 100 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டிருந்த நிலையில், வருகை தந்தவர்களில் மாணவிகளின் எண்ணிக்கையே அதிகமாக இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்தவகையில் சுமார் 2 மணி நேரம் நடந்த இந்நிகழ்ச்சியில் ஆபாச படம் வரையில் பாலியல் தொடர்பான பல விடயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சென்னை

# திருமணமான மூன்றே நாள்களில் உயிரிழந்த மணமகன்

திருமணமாகி மூன்று நாட்களே ஆனநிலையில், விபத்தில் சிக்கி மணமகன் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை மதுரவாயலை சேர்ந்தவர் மணிகண்டன். 21 வயதான இவருக்கு கடந்த 3 தினங்களுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மணிகண்டன் தனது நண்பர் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது திடீரென நிலை தடுமாறி மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்துள்ளார்.



இதில் படுகாயங்களுக்குள்ளான மணிகண்டன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவரது மரணம் அவருடைய மனைவி மற்றும் உறவினர்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



இரண்டாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வீழ்த்திய இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து வென்றிருந்த நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து:

நியூசிலாந்து: 99/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் சான்ட்னெர் ஆ.இ 19 (23), மார்க் சப்மன் 14 (21), மிஷெல் பிறேஸ்வெல் 14 (22), பின் அலென் 11 (10), டெவோன் கொன்வே 11 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங்க் 2/7 [2], யுஸ்வேந்திர சஹால் □ [2], தீபக் ஹூடா 1/17 [4], குல்டீப் யாதவ் 1/17 [4], வொஷிங்டன் சுந்தர் 1/17 [3], ஹர்டிக் பாண்டியா 1/25 [4])

இந்தியா: 101/4 (19.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் ஆ.இ 26 [31], இஷன் கிஷன் 19 (32), ஹர்டிக் பாண்டியா ஆ.இ 15 (20), ராகுல் ட்ரிபாதி 13 (18), ஷுப்மன் கில் 11 (09), வொஷிங்டன் சுந்தர் 10 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிஷெல் பிறேஸ்வெல் 1/13 [4], இஷ் சோதி 1/24 [4], கிளென் பிலிப்ஸ் 0/17 [4], மிற்செல் சான்ட்னெர் 0/20 [4]), மார்க் சப்மன் 0/4 [1], லொக்கி பெர்கியூசன் 0/7 [1])

போட்டியின் நாயகன்: சூரியகுமார் யாதவ்



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில்

## 10ஆவது முறையாக சம்பியனான ஜோக்கோவிச்

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் தனது சாதனையை நீடிக்கும் வகையில் 10ஆவது முறையாக தற்போதைய உலகின் முதலாம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் சம்பியனானார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தனது இறுதிப் போட்டியில் உலகின் தற்போதைய மூன்றாம் நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபனோஸ் சிட்டிபாஸை எதிர்கொண்ட சேர்பியாவின் ஜோக்கோவிச், 6-3, 7-6 (7-4), 7-6 (7-5) என்ற நேர் செட்களில் வென்று 22ஆவது கிரான்ட் ஸ்லாம் பட்டத்தை வென்று அதிக கிரான்ட் ஸ்லாம்களை வென்றவர்களின் பட்டியலில் தற்போதைய ஆறாம் நிலை வீரரான ஸ்பெய்னின் ரஃபேல் நடாலின் சாதனையை சமப்படுத்தியுள்ளார்.



எஃப்.ஏ கிண்ணத் தொடர்:

## வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டச் சங்க (எஃப்.ஏ) கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான லிவர்பூல் வெளியேற்றப்பட்டுள்ளது.

பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான விலகல் முறையிலாக இத்தொடரின் நான்காவது சுற்றுப் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து லிவர்பூல் வெளியேற்றப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா

இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த தென்னாபிரிக்கா, புளூம்பொன்டெய்னில் நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் தெம்பா பவுமா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.



அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, அணித்தலைவர் ஜொஸ் பட்லரின் ஆட்டமிழக்காத 94 (81), ஹரி ப்ரூக்கின் 80 (75), மொயின் அலியின் 51 (45), சாம் கர்ரனின் 28 (17) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அன்றிச் நொர்கியா 2 விக்கெட்டுகளையும், வெய்ன் பார்னல், கேஷவ் மஹராஜ், ஏய்டன் மார்க்ரம், மார்கோ ஜன்சன், லுங்கி என்கிடி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பதிலுக்கு 343 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, பவுமாவின் 109 (102), டேவிட் மில்லரின் ஆட்டமிழக்காத 58 (37), ஏய்டன் மார்க்ரமின் 49 (43), றஸி வான் டர் டுஸனின் 38 (38), மார்கோ ஜன்சனின் ஆட்டமிழக்காத 32 (29), குயின்டன் டி கொக் 31 (28), ஹென்றிச் கிளாசெனின் 27 (19) ஓட்டங்களோடு 49.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஒலி ஸ்டோன், அடில் ரஷீட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சாம் கர்ரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக பவுமா தெரிவானார்.

# இன்ஸ்டாகிராம் பயனர்களுக்கு நற்செய்தி

1 நிமிடம் வரையிலான வீடியோவைப் பதிவேற்றும் வசதியை இன்ஸ்டாகிராம் சமூகவலைதளம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இன்ஸ்டாகிராமில் ‘Stories‘ என்ற பிரிவில் முன்னர் 1 நிமிட வீடியோவை பதிவேற்றம் செய்தால், அது 15 செக்கன் வீடியோக்களாக 4 பிரிவுகளாகப் பிரிந்து பதிவேற்றம் ஆகும்.

இதனால் வீடியோ பதிவேற்றம் செய்வோர், 15 செக்கன்கள் வீடியோக்களாக பதிவேற்றும் நிலை காணப்பட்டது.

இப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு கடந்த ஆண்டு குறிப்பிட்ட சிலரிடம் மாத்திரம் புதிய வசதியை இன்ஸ்டாகிராம் பரிசோதித்து வந்தது.

இதில் கிடைத்த முடிவின் அடிப்படையில், உலகம் முழுவதும் 1 நிமிட வீடியோவை பதிவேற்றும் வசதியை இன்ஸ்டாகிராம் தற்போது அறிமுகம் செய்துள்ளது.

இது இன்டாகிராம் பயனர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.






## வாசனை திரவியம் பயன்படுத்திய சிறுமி மரணம்

வாசனைத் திரவியம் பயன்படுத்திய 14 வயதான ஜார்ஜியா ஜிரீன் என்ற சிறுமி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த சிறுமி தனது படுக்கை அறையில் வாசனைத்திரவியமொன்றை அடித்துள்ள நிலையில், அதிலிருந்து வந்த வாயுத் துகள்களை சுவாசித்த அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மருத்துவர்கள்” பொதுவாக வாசனைத் திரவியங்களில் காணப்படும் வேதிப்பொருட்கள் நச்சுத்தன்மை வாய்ந்தவை எனவும், இது குழந்தைகளுக்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் பிரச்னைகளை ஏற்படுத்தும் எனவும், வாசனைத் திரவியங்களை பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


பாகிஸ்தான்

## சிறுபான்மையினர் மீது அத்துமீறல்; வீடுகள் இடிப்பு

பாகிஸ்தானில் நாளுக்கு நாள் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

இந்நிலையில் ராவல்பிண்டி கண்டோன்மென்ட் நகரில் சுமார் 70 ஆண்டுகளாக வசித்து வரும் இந்து, கிறிஸ்தவ மற்றும் ஷியா பிரிவினர்களுக்குச் சொந்தமான 5 வீடுகளை சுமார் 100 பேர் கொண்ட கும்பலொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடித்து சேதப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களது வீடுகளிலிருந்த பொருட்களை யும் தெருவில் வீசியுள்ளதோடு அவர்களையும் தாக்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் பாகிஸ்தானில், சிறுபான்மையினர் மீதான தாக்குதல் குறித்து நீதிமன்றங்கள் கூட மௌனம் காப்பதாக சிறுபான்மையினர் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


பாகிஸ்தான்



## படகு, பஸ் விபத்தில் 59 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் கடந்த 29 ஆம் திகதி இருவேறு இடங்களில் இடம்பெற்ற படகு மற்றும் பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 59 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள ஏரியொன்றில் சுற்றுலா சென்ற சிறுவர்களின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இவ்விபத்தில் 13 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் பாகிஸ்தானின் குவெட்டா நகரில் இருந்து கராச்சி நோக்கி பயணித்த பஸ்ஸொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளமொன்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 42 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்தில் ஒரு குழந்தை உட்பட 3 பேர் மாத்திரமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எகிப்து

## தங்க மூலாம் பூசப்பட்ட மம்மி கண்டுபிடிப்பு

எகிப்தில் சுமார் 4300 ஆண்டுகள் பழமையான தங்கத்தால் பூசப்பட்ட மம்மியொன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சுமார் 50 அடி ஆழத்தில், சுண்ணாம்புக் கற்கலால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இம் மம்மியின் பெயர் ‘ஹெகாஷெப்ஸ்’ எனவும், இது அக்கால அரசின் காலவராக இருந்த மனிதனின், மம்மி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம் மம்மியானது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மம்மிகளிலேயே மிகவும் பழமையானதாக இருக்கலாம் எனவும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 31 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.